C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

ஓ

சிவமயம்

பார்த்திப பூசா விதி



திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை

2000

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உ

சிவமயம்

இந்நூல்

விக்ரம ஆண்டு கார்த்திகை மாதம்

மூன்றும் சோமவாரம்

(4 — 12 — 2000) அன்று

வெளியிடப்பெறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

வெளியீடு எண்:470

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பார்த்திப பூசா விதி

விரிவு அட்டவணை

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

23–ஆவது குரு மகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக

பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம்

வெளியிடப்பெறுவது.

திருவாவடுதுறை ஆதீனம்

2000

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உரிமை பதிவு
முதல் பதிப்பு 1995
இரண்டாம் பதிப்பு 2000
விலை ரூபா.10.00

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சிவலிங்கம்



அறுபத்நுநான்கு சிவமூர்த்தங்களில்
ஆநிமூர்த்தமாக விளங்கும் சிவலிங்கத் திருமேனி :

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடுழி தழைக மாதோ.

–தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-N

ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

வேட்க ளத்துறை வேதியன் எம்இறை
ஆக்கள் ஏறுவர் ஆன்ஐஞ்சும் ஆடுவர்
பூக்கள் கொண்டு அவன் பொன்அடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற்று அண்ணலே.

ஆன்ம நாயகனாகிய சிவபெருமான் திருவடி நீழலில் வாழ்வதாகிய சிவானந்தம் ஒன்றற்கே உரியன ஆன்மாக்கள். இப்பேரானந்தத்தை அடைந்து இன்புற வொட்டாது ஆன்மாக் களின் அறிவு இச்சை செயல்களை மறைத்து அநாதி காலமாகவே அவற்றிற்குக் குற்றம் செய்வன மலம். மலக் குற்றத்தை நீக்கு தற்கு உரிய பக்குவ காலம் அமையும் பொழுது சிவபிரான் அதனை நீக்கி அருள் செய்வான். அந்தப் பக்குவ காலம் ஆன்மாக்களுக்குச் சிவார்ச்சனையாகிய சிவபூசையாலேயே உண்டாவதாகும். சிவபெருமானே முழு முதற் கடவுள் என்று உணர்ந்து, சிவாகம நெறிப்படி சிவதீட்சை பெற்று, ஆசிரியர் அனுமதிப்படி சிவபூசை யைச் செய்தாலல்லாமல், சிவபூசையால் ஆகும் சிறந்த பலன் கைகூடாது. இத்தகு சிவபூசைப் பேறும் முன்னைத் தவம் உடையவர்க்கன்றி ஏனையர்க்கு எய்துவதில்லை.

சிவபூசை, பரார்த்தம் ஆன்மார்த்தம் என இரு வகைத்தது. சிவாலயங்களில் சிவாகம பிரதிட்டை விதிப்படி பூசைகள் செய்யப் படுவது பரார்த்தமாகும். இது உலகத்தவர்கள் சிவனருள் பெறுதற் பொருட்டு ஆகும். ஆன்மார்த்த பூசையாவது தன்பொருட்டு அச் சிவாகம விதிப்படி செய்து வருவதாகும்.

சிவபூவை விதிகளைக் கூறும் சிவாகம பத்ததிப்படி இவ் ஆதீனத்தில் அநுட்டிக்கப்பெற்று வரும் பூசை முறைகளை விளக்கும் 170 ஆண்டுகளுக்கு முற்பட்டதான பழமையான கையெழுத்துப் பிரதி நூலொன்று ஆதீன நூலகம் சரசுவதி மகாலில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உள்ளது. பீஜாக்ஷரங்களோடு அமையும் மந்திரங்கள் சில அப் பீஜங்கள் இன்றி இந்நூலில் எழுதப்பெற்றுள்ளன.

பூசை விதிமுறை பற்றிய இப்பழமையான நூல், கையெழுத்துப் பிரதியில் உள்ளவாறே பதிப்பிக்கப் பெறவேண்டும் என ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக ஞான பிடத்து எழுந்தருளிச் சித்தாந்த சைவ பரிபாலனமும் செந்தமிழ்ப் பரிபாலனமும் வழக்கம் போலவே சிறப்பாக நடைபெறும்படி திருவுளங் கொண்டு அநுக்கிரகங்கள் செய்து சிவஞானச் செங்கோல் செலுத்தி வரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள் கட்டளையிட்டருளியபடி இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளி வருகிறது.

சிவநேய அன்பர்கள் இந்நூலினைப் பெற்று, ஆசிரியர்பால் முறையாக தீட்சைகளும் ஆன்மார்த்த மூர்த்தி எழுந்தருளப் பண்ணுதலும் கொண்டு மெய்யன்புடன் சிவபூசையினை இடையீடில்லாது செய்து இம்மையில் வானவர் செல்வமும் அம்மையில் பிறவி நீக்கமும் சிவானந்தமும் எய்தி இன்புற விரும்புகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

வடமே
–வாய

மேற்கு
–வருணன்–

5
சரஸ்வதி

6
லட்சுமி

4
கணபதி

தென்மே
–நிருத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பார்த்திப பூசாவிதிக் கோட்டம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

உள்ளது.
பீஜங்கள்

பூ
ழுத்துப் பீ
ஆதீனத்தை
பிடத்து எ
பரிபாலன
திருவுள
செங்கே
சந்நிதி
பதிப்பாச

க
முறைய
பண்ணு
டில்லாத
பிறவி நீ

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

பார்த்திப பூசாவிதிக் கொத்து

ஸ்நானம், அநுட்டானம்,
இடம் பண்ணல்
கவசத்தால் கோடு இடல்
எண்திக்கினும் இருதையத்தால்
பத்திரமிடல்
திருமஞ்சன சுத்தி
சாமானிய அர்க்கியம் தாபித்தல்
சூரிய பூசை
மேலைத் துவார பூசை
மூஇடைபூறு
அஸ்திர துவாரபாலர் பூசை
பூத சுத்தி
அந்தரியாக பூசை
தான சுத்தி
பாத்தியாசமன அர்க்கியம்
தாபித்தல்
திரவிய சுத்தி
மந்திர சுத்தி
சடுத்தாசனம்
லிங்க சுத்தி
வடக்குத் துவாரம்
மகாகணபதி,
மகாலட்சுமி
சத்தகுரு பூசை
ஆதார சத்தி அர்ச்சனை
சிவாசனம்
சிவமூர்த்தி
தெண்டபங்கி
முண்டபங்கி
வித்தியா தேகம்
நேத்திரம்
ஆவாகனம்
ஸ்தாபனம்
சந்நிதானம்
சந்நிரோதனம்
நமஸ்காரம்
விண்ணப்பம்
சுவாகாந்தார்க்கியம்
காளகன்னி முத்திரை
லிங்க முத்திரை
நமஸ்கார முத்திரை
ஐமுக முத்திரை
இருதயாதியங்கம்
ஏகத்துவம்
வெளஷடாந்த அர்க்கியம்
தாளத்திரயம்
திக்குபந்தனம்
அவகுண்டனம்
தேனுமுத்திரை
பகாமுத்திரை
பரமீகரணம்
பாத்தியாசமன அர்க்கியம்
கந்தம்புஷ்பம் அறுகு அட்சதை
தூபதீபம்
ஆசமனார்க்கியம்
அஷ்டபுஷ்பம்
அபிஷேகம்
திருவொற்றாடை
விபூதி சாத்தல்
மூலத்தால் ஒரு புஷ்பம்
பொன் அரைஞாண்
பட்டுக் கௌபீனம்
தங்கப் பரிவட்டம்
சந்தனம் களப கஸ்தூரி
குங்கும் கோரோசனை
புனுகு பச்சை கற்பூரம்
ஆடை ஆபரணாதிகள் சாத்தல்
இரத்தினகிரீடம் குண்டலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

கண்டமாலை ஆரம் சவடி
ஏகவடம் சவுக்களி
எருக்கம்பூமாலை, வில்வமாலை,
தும்பை மாலை பூணூல்
தண்டை சதங்கை சிலம்பு
இவைகள் சாத்தல்
தத்துவத்திரயம்
இண்டைமாலை, தொடர்மாலை
கொன்றை மாலை
சாத்தல்
ஆசமன அர்க்கியம்
மனோரத முத்திரை
பஞ்சப்பிரம சடங்கம்
இஷ்டகாமியம்
இலயாங்கம்
போகாங்கம்
ஏகத்துவம்
பாத்தியாசமன அர்க்கியம்
தாம்பூலம்
ஆசமன அர்க்கியம்
பரிவாரங்கட்கு நிவேதனம்
அர்க்கியம்
சுவாமிக்குத் தூபதீபம்
சோடசோபசாரம்
பாத்தியாசமன அர்க்கியம்
மனோன்மணி பூசை
சுவாமிக்குத் தூபதீபம்
நிவேதனம்
கரோத்துவதரம்
பாத்தியாசமன அர்க்கியம்
கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை
புஷ்பாஞ்சலி
நித்திய பௌத்திரம்
செபித்துச் சாத்தல்
சிவகுரு பீடம், யோக பீடம்
வித்தியாதீதா பீடம் பூசை
தோத்திரம்
பிரதக்ஷிணம்
நமஸ்காரம்
வேண்டிக்கொள்ளல்
அஷ்டபுஷ்பம் சாத்தல்
சங்கீதார்ச்சனை
இரண்டாங்கால பூசை
மூன்றாங்கால பூசை
பராமுகார்ச்சனை
அர்க்கியம்
தெறித்தெழுப்பிக் கூட்டிச்
சாத்தல்
திக்கு பந்தனம்
அவகுண்டனம்
ஒடுக்கல்
பரிவார தேவதைகளை
அர்ச்சித்து அர்க்கியம்
கொடுத்து ஒடுக்குதல்
சாமானியம் ஒடுக்கல்
சண்டேஸ்வர பூசை
பாத்தியாசமன அர்க்கியம்
ஒடுக்கல்
நின்மாலிய மாற்றல்
பூமி சுத்தி
ஆசமனம்
அதரசுத்தி
தொடுமிடம்
கரசுத்தி
கரநியாசம்
அங்கநியாசம்
மூலம் அகோரம் செபித்தல்
சகலீகரணம்
விபூதி தரித்தல், சிவதரிசனம்
குரு தரிசனம்
போசனம் செய்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அர்க்கியங்கள் கூட்டும் முறை

திருமஞ்சனக்குடத்தில் 'இருதையாய வெளஷட்' எனக் கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை போட்டுச் சங்கிதையாகிய பதினோரு மந்திரங் களால் அர்ச்சித்து அம்மந்திரங்களாலேயே அபிமந்திரித்து அட்ட சங்காரம் பண்ணி அபிஷேக கலசத்தால் திருமஞ்சனம் மொண்டு மும்முறை விந்துத்தானம் வரை தூக்கி 'இருதையாய வெளஷட்' எனப் பூரித்து இங்ஙனம் திருமஞ்சனம் சுத்தி செய்க. பின்பு அபிஷேக கலசத்தால் திருமஞ்சனம் முகந்து பரிவார தேவதைகளுக்கு ஏற்பட்ட சாமானிய அர்க்கியத்திலே 'இருதையாய வெளஷட்' எனப் பூரித்து அம்மந்திரத்தினாலேயே கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை போட்டு 'ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்' எனப் பிரணவத்தால் ஏழ்முறை அர்ச்சித்து ஏழ்முறை அபிமந்திரித்து அட்டசங்காரம் பண்ணுக.

அதன்பின் அபிஷேக கலசத்தால் திருமஞ்சனம் முகந்து பாத்தி யார்க்கியத்தில் 'இருதையாய வெளஷட்' எனப் பூரித்து அம்மந்திரத்தி னாலேயே கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை போட்டு இருதையம் முதலான சடங்க மந்திரங்களினால் அர்ச்சித்து அச்சடங்கத்தாலேயே அபி மந்திரித்து அட்டசங்காரம் பண்ணிப் பின் அபிஷேக கலசத்தால் திருமஞ்சனம் முகந்து ஆசமனார்க்கியத்தில் 'இருதையாய வெளஷட்' என்று பூரித்து அம்மந்திரத்தினாலேயே கந்தம் அறுகு அட்சதை போட்டு ஈசானம் முதலான பஞ்சப் பிரமமும் இருதையம் முதலான சடங்க முகமாகிய பதினோரு மந்திரங்களால் அர்ச்சித்து அவற்றால் அபி மந்திரித்து அட்டசங்காரம் செய்த பின்னர் அபிஷேக கலசத்தால் விசேஷார்க்கியத்தில் திருமஞ்சனம் முகந்து 'சிவாய வெளஷட்' எனப் பூரித்து அம் மந்திரத்தினாலேயே கந்தம், புஷ்பம், அறுகு, அட்சதை போட்டுச் 'சிவாசனாய நம, சிவமூர்த்தியே நம, சிவாய நம' என ஆசன மூர்த்தி மூலத்தாலும் பஞ்சப் பிரமத்தாலும் 'வித்தியாதேகாய நம' என வித்தியா தேகத்தாலும் சடங்கத்தாலும் அர்ச்சித்து அவற்றால் அபி மந்திரித்து அட்ட சங்காரம் பண்ணி அவ்விசேஷார்க்கியத்தால் எங்கும் புரோட்சிக்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

இதுவே அர்க்கியங்கள் கூட்டும் முறைமையாம்.

சிவபெருமானுடைய பாதத்தில் பாத்தியத்தை 'ஓம் சிவாய நம' என நமாந்தமாகவும், முகத்தில் ஆசமனத்தை 'ஓம் சிவாய சுதா' எனச் சுதாந்தமாகவும், திருமுடியில் விசேஷார்க்கியத்தை 'ஓம் சிவாய சுவாகா' எனச் சுவாகாந்தமாகவும் கொடுப்பது விதியாதலால் சாமானிய அர்க்கியம் பரிவார தேவதைகளின் உபயோகத்திற்கும் பாத்தியாசமன விசேஷார்க்கியங்கள் சிவபெருமானுடைய உபயோகத்திற்கும் ஆம் என்றுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

திருவாவடுதுறை ஆதீனம்

பார்த்திப பூசா விதி

விரிவு அட்டவணை

ஸ்நானம் அநுட்டானம் செய்து செபத்தியானம் பண்ணிச் சிவ பூசாத்தானத்திலே வைத்து வட்டகை செம்பு முதலானவற்றையெல்லாம் ''அத்திராய நம'' என வெள்ளையிட்டுக் ''கவசாய நம'' வெனக் கழுவிச் சுத்தி செய்து கூட்டிப் பூசாவேதிகையை 'அத்திராய நம' வென்று தெளித்துக் 'கவசாய நம' வென தடவி அம்மந்திரத்தினாலேயே கோடிட்டு 'இருதையாய நம' வெனக் கிழக்கு முதல் எட்டுத் திக்கினும் பத்திரம் கிள்ளி வைத்துப் பின்பு திருமஞ்சனக் குடத்திலே நிரீக்ஷணாதி நாற்சுத்தி செய்து 'கவசாய நம' வெனப் பரிவட்டத்தால் வாய்கட்டிப் பிரமாங்கத் தால் அதாவது சங்கிதை பதினொன்றால் வடித்தெடுத்து ஒரு புஷ்பம் போட்டு வைத்துக் கொண்டு பூசைக்குள்ள உபகளெல்லாவற்றையும் 'அத்திராய நம' வென ஆசாரங் கூட்டியருகே அமைத்துக் கொண்டு சந்தனக் கல்லையும் சந்தனக் கட்டையையும் 'அத்திராய நம' வெனக் கழுவிப் பூசைத் தானத்திலே வைத்துச் சந்தனமிழைத்துத் தட்டில் வைத்ததன் மீது ஒரு பத்திரம் கிள்ளி வைத்து ஆசமனம் அதரசுத்தி தொடுமிடஞ் செய்து விபூதி தரித்துக் கொண்டு கரநியாசம் அங்கநியாசம் பண்ணிப் பின்பு திருமஞ்சன சுத்தி செய்க.

திருமஞ்சனக் குடத்தில் கந்தம் புஷ்பம் அறுகு அட்சதைகளை 'இருதையாய வௌஷட்' என்று போட்டு அத்திருமஞ்சனத்தில் சங்கி தையால் அர்ச்சித்து அபிமந்திரித்து அட்டசங்காரம் பண்ணித் திருமஞ் சனத்தை விந்துத் தானத்திலேயிருக்கின்ற அமிர்த சலமாகப் பாவித்து அபிஷேக கலசத்தால் மூக்கால் முகந்தெடுத்து 'இருதையாய வௌஷட்' என்று விந்துத்தானம் வரை தூக்கிப் பூரித்து இங்ஙனம் திருமஞ்சன சுத்தி செய்த பின்பு சாமானியார்க்கியமொன்றைப் பரிவார தேவதைகட்கு உபயோகமாகக் கூட்டுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

வட்டகை நான்கில் முதல் வட்டகையில் அதாவது அபிஷேக கலசத்தையொட்டி அடுத்திருக்கும் வட்டகையில் வௌஷடாந்த இருதைய மந்திரத்தால் சலம் பூரித்து அந்த மந்திரத்தாலேயே கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை போட்டுப் பிரணவத்தால் ஏழ்முறை அர்ச்சித்து ஏழ்முறை அபிமந்திரித்து நிரீக்ஷணாதி நாற்சுத்தியும் தாளத்திரையமும் திக்கு பந்தனம் அவகுண்டனமும் செய்து தேனு முத்திரை மகா முத்திரை களும் கொடுத்துப் பின்பு அச்சாமானிய அர்க்கியத்தில் ஒரு புஷ்பம் தோய்த்துத் தன் சிரசில் மும்முறை அத்திர மந்திரத்தால் புரோட்சித்துக் கொண்டு சூரிய பூசாத்தானமாகிய அக்கினி கோணத்திலும் மேலைத் துவார பூசாத்தானத்திலும் முக்காற் புரோட்சிக்க.

பின்பு சுவாமிக்கு அக்கினி கோணத்திலே சிவசூரியனை ஆசன மூர்த்தி மூலத்தினாலே 'ஓம் சிவசூரியாசனாய நம' 'ஓம் சிவசூரிய மூர்த்தியே நம' 'ஓம் சிவசூரியாய நம' வென அர்ச்சித்துச் சூரியனுக்கு வலப்பக்கமான வடபாகத்தில் 'உஷாதேவியாசனாய நம' 'உஷாதேவி மூர்த்தாயை நம' 'உஷா தேவியை நம' இடப்பாகமான தென்பாகத்தில் 'பிரத்துஷாதேவியாசனாய நம' 'பிரத்துஷாதேவி மூர்த்தாயை நம' 'பிரத்துஷா தேவியை நம' வென்று இரண்டு தேவிமார்களையும் ஆசன மூர்த்தி மூலங்களால் அர்ச்சித்து அவரவர் மந்திரங்களால் சுவாகாந்தமாக அர்க்கியங் கொடுத்து அபிஷேகம் செய்து மீட்டும் சுவாகாந்தமாகவே அர்க்கியம் புரோட்சித்து நமாந்தமாக அவரவர் மூலத்தாலர்ச்சனை பண்ணிக் கந்தம் புஷ்பம் அறுகு அட்சதை சாத்தித் தூபதீபம் கொடுத்து நிவேதனம் செய்து மீண்டும் தூபதீபம் பணிமாறி அர்க்கியம் கொடுத்து அர்ச்சித்துச் ''சிவபூசைக்கு விக்கினம் வராமல் இரட்சிக்க'' என்றிரந்து வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டு பின்புமேலைத் துவார பூசை செய்க.

மேற்படியின் தெற்கே கணபதிக்கும் கணபதியின் வடக்கே சரஸ் வதிக்கும் கணபதி சரஸ்வதிக்கு நடுவே இலக்ஷ்மிக்கும் கணபதிக்குத் தெற்கே நந்திக்கும் நந்திக்கு வடக்கே கங்கைக்கும் சரஸ்வதிக்கு வடக்கே மகா காளைக்கும் மகா காளையின் தெற்கே யமுனைக்கும் தானம் ஏற் படுத்திக் கொண்டு ''ஓம் கணபதியாசனாய நம' 'ஓம் கணபதிமூர்த்தியே நம' 'ஓம் கணபதியே நம' என்றும், 'ஓம் சரஸ்வதியாசனாய நம, ஓம் சரஸ்வதி மூர்த்தாயை நம, ஓம் சரஸ்வதியை நம' வென்றும், 'ஓம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

இலக்ஷ்மியாசனாய நம, ஓம் இலக்ஷ்மிமூர்த்தாயை நம, ஓம் இலக்ஷ்மியே நம' வென்றும், ''நந்தியாசனாய நம, ஓம் நந்திமூர்த்தியை நம, ஓம் நந்தியே நம' வென்றும், 'ஓம் கங்கையாசனாய நம, ஓம் கங்கை மூர்த் தாயை நம, ஓம் கங்கையே நம' வென்றும், 'ஓம் மகாகாளையாசனாய நம, மகா காளைமூர்த்தியை நம, ஓம் மகா காளையே நம' வென்றும், 'ஓம் யமுனையாசனாயை நம, ஓம் யமனை மூர்த்தாயை நம, ஓம் யமுனையே நம' வென்றும் இந்தப்படியெழுவர்களையும் ஆசனமூர்த்தி மூலத்தால் அர்ச்சித்துச் சாமானியார்க்கியம் சுவாகாந்தமான அவரவர் நாம மூல மந்திரங்களாலே கொடுத்து அபிஷேகம் செய்து பின்னும் சுவாகாந்த மாகவே அர்க்கியம் புரோட்சித்து அவரவர் நாம மந்திரங்களில் நமாந்தம் கூட்டிக் கந்தபுஷ்பம் சாத்தியர்ச்சித்து ''ஓம் சர்வேப்பியோ துவாரபாலேப் பியோ நம, அடியேன் சிவனைப் பூசை பண்ணப் போகிறேன். விக்கி னங்கள் வராமல் காத்தருள வேண்டும்'' என்று இரந்து வேண்டி அவர்கள் அனுக்ஞை பெற்றுக் கொண்டு மூவிடையூறு தீர்க்க.

மேலே ஆகாசத்தைப் பார்த்துச் 'சிவாய நம' வென்று மூல மந்திரம் உச்சரித்து ஒரு புஷ்பம் அல்லது ஒரு பத்திரம் தெறித்துத் திவ்ய மான விக்கினங்களெல்லாம் போக்கி இரு பக்கமும்'அத்திராய பட்' என்று ஒவ்வொரு புஷ்பம் கொண்டு தெறித்துப் போக்கிப் பூமியிலும் ஒரு பத்திரங்கிள்ளி 'ஓம் ஹாம் சிலீம் பம் சும் ஹூம்பட் பாசுபதாஸ்திராய ஹூம் பண்ணமஹ' ✱என்று அகோர சிவாசாரியார் பத்ததியிலுள்ள மந்திரத்தினை ''ஓம் ஹாம் சிலீம் பம் சும் பாசுபதாஸ்திராய ஹூம் பட்'' என்ற அந்த மட்டே கொண்டு உச்சரித்துப் போட்டுவிட்டுப் பின்பு வலக் கால் புறவடியினாலே தாடித்துத் தட்டிப் பூமியிலுள்ள விக்கினங்களை யெல்லாம் போக்கியதாகப் பாவிக்க. இதுவே மூவிடையூறு தீர்த்தலாம்.

இனிப் பூசா மண்டபத்துக்குப் போம்பொழுது ''ஓம் சர்வேப் பியோ துவாரேப்பியோ நம, அடியேன் சிவனைப் பூசிக்கப் போகிறேன்.

✱ஓம் ஹாம் சிலீம் பம் சும் ஹூம் பட் பாசுபதாஸ்திராய ஹூம் பண்ணமஹ'' என்று அகோர சிவாசாரியார் பத்ததியிலுள்ளதை ஈண்டு ''ஓம் ஹாம் சிலீம் பம் சும் பாசுபதாஸ்திராய ஹூம் பட்'' என்று அந்த மட்டே கொள்ளத்தக்கது. சில ஏட்டுப் பிரதிகளிலே ''ஓம் சிலீம் பசும் பட பாசுபத வத்திராய நம'' ''ஓம் சிலும்பாசுபத பத்திராய வும்படு'' என்றுள்ளவை யெல்லாம் கரப்பிசகால் நேர்ந்த வழுவுள்ளனவாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

விக்கினங்கள் வராமல் காத்துக் கொண்டருளவேண்டும்'' என்று மெய்யுண்மையோடிரந்து வேண்டிக் கொண்டு இடப்பாரிசத்திலே வலக்கால் முன்னிட்டுப் போம்பொழுது கீழ்ப்படியில் சரஸ்வதிக்குக் கிழக்கே அஸ்திரத் துவார பாலரையும் அவ்வஸ்திரத் துவாரபாலருக்குத் தெற்கே நிருதி கோணத்திலே வாஸ்துபதி பிரமனையும் பத்மாசனமிட்டு எழுந்தருளப் பண்ணி யாசனமூர்த்தி மூலத்தால் அர்ச்சித்துச் சுவாகாந்த மாக அர்க்கியம் கொடுத்து அபிஷேகம் செய்து சுவாகாந்தமாகவே அர்க்கியம் புரோட்சித்து நமாந்தமாகக் கந்த புஷ்பம் சாத்தியர்ச்சனை செய்து பூசை முடித்திட்ட பின்பு முன்சொன்னவாறு இவர்களை இரந்து வேண்டிக் கொண்டு இவ்விதம் ஆலயப் பிரவேசம் செய்தபின் பூத சுத்தி செய்க.

பூத சுத்தியின் சுருக்கம்

சரீரத்தைத் தலைகீழாக நிற்கிற ஆலவிருஷமாகப் பாவித்து இருதையம், கண்டம், தாலு, புருவமத்தி, துவாதசாந்தமான உச்சியென் னும் இவ்வைந்திடங்களிலேயும் 'அத்திராயவும்பட்' என்று தெறித்து ஆத்மாவை நட்சத்திரம் போன்றதாகப் பாவித்துச் சங்கார முத்திரையால் பிடித்து 'ஓம் ஹாம் ஆத்மனே நம' வென்று துவாத சாந்தத்திலே சிவனிடத் திலே யோசித்து வலக்கால் பெருவிரலிலே நின்றும் அக்கினியை அத்தி ரத்தால் எழுப்பி தகனம் பண்ணிப் புருவ மத்தியிலேயிருக்கிற அமிர்தத் தினாலே நனைத்துத் திவ்விய சரீரம் வந்ததாகப் பாவித்துக் கொண்டு பின்பு அந்தரியாக பூசை செய்க.

பூத சுத்தியின் விரிவு

சிவபூசாத்தானத்தில் திக்கு பந்தனம் அவகுண்டனம் தேனு முத்திரை மேலும் கீழும் கொடுத்த பின்பு பிராணாயாமம் கரநியாசம் அங்க நியாசம் செய்து சரீரத்திலேயுள்ள கன்மம் நீங்கும்படி நாடி சோதனை செய்க. அஃதாவது சரீரத்தை யிருபாதப் பெருவிரலினின்றும் அரையளவும் அதாவது மூலாதாரம் அளவும் இரண்டுருவாகவும் அரைக்கு மேல் சிரம் வரையில் ஒருருவாகவும், இடைபிங்கலைகளி னாலே பின்னப்பட்டு இருதையம், கண்டம், தாலுமூலம், புருவநடு, பிரம

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-N

ரந்திரம் என்னும் இவ்வைந்து தானங்களிலும் ஐந்து தாமரை முகிழ் கீழ் நோக்கியிருக்கிறதாகவும் இடைபிங்கலைகள் மாறியேறியிருக்கின்றதாக வும் உள்துளையுடனே கூடின சுழுமுனைநாடி மத்தியிலே நிற்கின்றதாக வும் துவாத சாந்தத்திலேயிருக்கிற சத்தியினிடத்திலே நின்றும் சுழுமுனை நாடி வழியே பொழியப்பட்ட அமிர்த தாரையினாலே உள்ளும் புறம்பும் நனைந்திருக்கின்றதாகவும் தியானித்து அத்திர மந்திரத்தினாலே உங்காரத் திலே வாயுவை வாங்கிப் பூரக கும்பகம் செய்து கபாலத்திலே நிறுத்திக் கொண்டு 'அத்திராயவும்பட்' என்று சோடிகா முத்திரையினாலே ஐந்து தானத்திலும் தெறித்து ஐந்து தாமரை முகிழும் மேனோக்கியலர்ந்ததாகப் பாவித்து வாயுவை வல நாசியினாலே விடுத்து இரேசித்து மீளவும் வாயுவைப் பூரக கும்பகம் செய்து மேனோக்கியிருதைய கமலத்திலே யிருந்த ஆத்மாவை நட்சத்திரப் பிரகாசத்தை உடையதாகவும் சாந்த பீச மாகவும் இருதையம் சம்புடமாகவும் ஊங்கார சிகாந்தத்ததாகவும் புரியட் டகமெனப்படும் சூக்ஷும சரீரத்தை விட்டு நீங்காமலிருக்கிற புருட னாகவும் சூக்குமனாகவும் ஏகனாகவும் நிராமயனாகவும் தாரகாகர மாகவும் தியானித்துச் சங்கார முத்திரையினாலே 'ஓம் ஊம் ஆம் அம் ஆம் ஊம் ஆத்மனே நம' வென்றெடுத்துத் துவாத சாந்தத்திலெழுந்தருளி யிருக்கின்ற பதியிடத்தில் கூட்டுக. இதுவரையிலும் நாடி சோதனையாம்.

இனிச் சூக்குமதேக சுத்தியாகத் தத்தவங்களையொடுக்கும் விதம்:– சத்தமும் பரிசமும் சதுர்முகனிடத்திலும் ரசம் விஷ்ணுவிடத்திலும் உருவமும் கந்தமும் ருத்திரனிடத்திலும் புத்தியும் அகங்காரமும் மகேசுர னிடத்திலும் மனோவிந்து சதாசிவனிடத்திலுமாக இந்த ஐவரிடத்திலும் ஒடுக்கிக் கொள்க. இவ்வாறொடுக்கின் சூக்கும தேகசுத்தி வரும்.

இனிப் பூதசுத்தி பண்ணும் விதம்:–

முன்பு பிருதிவியைச் சோதிக்க பிருதிவி நாற்கோணமாய்ப் பொன்னிறமாய் கடின குணமாய் (ல) என்னும் அக்ஷரமாய், நிவர்த்தி கலையாய்ச் சத்தியோசாத மந்திரமாய், அதிதேவதை பிரமாவாய், ஆயுதம் வச்சிரமாய் இப்படி எட்டடை யாளத்தையும் ஐங்குணத்தையும் உடையதாயிருக்கிற பிருதுவியைத் தியானித்து நிவர்த்தி கலாரூபமாகப் பாவித்து ''ஓம் லம் நிவர்த்தி கலாயவும் பட்'' என்று மேனோக்கி ஐந்து தரமுச்சரித்து வாயுவைப் பூரக கும்பகம் செய்து இரேசித்து கந்தம் ரசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

ரூபம் பரிசம் சத்தமாகிய ஐந்து குணமும் கெட்டனவாகப் பாவித்துப் போக்கிப் பிருதிவியை வாயுவினிடமாகச் சேர்த்துப் பிருதிவி வாயுவுக்கு ஆகாரமானதாகப் பார்க்க.

இனி அப்புவைச் சோதிக்க. அப்புவானது அர்த்த சந்திரனைப் போன்றதாய்ச் சுவேத நிறமாய் நெகிழ்ந்த குணத்தையுடையதாய் 'உ வீம்' என்ற பீசமாய் 'வ' என்னும் அக்ஷரமாய்ப் பிரதிட்டா கலையாய் வாம தேவ மந்திரமாய் அதிதேவதை விஷ்ணுவாய் ஆயுதம் தாமரைப் பூவாய் இப்படி எட்டு அடையாளத்தையும் நான்கு குணத்தையுமுடையதாயிருக் கின்ற அப்புவைத் தியானித்து வாயுவைப் பூரக கும்பம் செய்து மேனோக்கி 'ஓம் உ வீம் பிரதிட்டா கலாயவும் பட்' என்று நான்கு தரம் உச்சரித்து இரேசித்து ரசம் ரூபம் பரிசம் சத்த முதலாகிய நாற்குணத்தையும் போக்கி அப்புவைத் தேயுவுக்காகாரமானதாகப் பார்க்க.

இனித் தேயுவைச் சோதிக்க. தேயுவானது மூன்று கோணமாய்ச் சிவப்பு நிறமாய்க் குணஞ்சூடாய் 'உ ரூம்' என்ற பீசமாய் 'ர' என்னும் அக்ஷரமாய் வித்தியா கலையாய் அகோர மந்திரமாய் அதி தேவதை ருத்திரனாய் ஆயுதம் சுவத்திகமாய் இப்படி எட்டடையாளத்தையும் மூன்று குணத்தையும் உடையதாயிருக்கின்ற தேயுவைத் தியானித்து வாயுவைப் பூரக கும்பகம் செய்து மேனோக்கி 'ஓம் ரூம் வித்தியா கலாயவும் பட்' என்று மூன்று தரமுச்சரித்து இரேசித்துச் சத்தமுதலான மூன்று குணத்தையும் போக்கித் தேயுவை அப்புவுக்கு ஆகாரமானதாகப் பார்க்க.

இனி வாயுவைச் சோதிக்க. வாயுவானது அறுகுணமாய்க் கருமை நிறமாய்க் குணம் சலனமதாய் ஐ என்கிற பீசமதாய் ''ய'' என்னும் அக்ஷரமாய்ச் சாந்தி கலையாய்த் தற்புருஷ மந்திரமாய் அதிதேவதை உமாமகேச்சுரராய் ஆயுதம் அறுபுள்ளியாய் இப்படி எட்டு அடையாளத் தையும் இரண்டு குணத்தையுமுடையதாயிருக்கிற வாயுவைத் தியானித்து வாயுவை பூரக கும்பகம் செய்து மேனோக்கி 'ஓம் ஈம் சாந்தி காலாயவும்பட்' என்று இரண்டு தரம் உச்சரித்துச் சத்தம் முதலான இரண்டு குணத்தையும் போக்கி வாயுவை பிருதிவிக்கு ஆகாரமானதாகப் பார்க்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-I

இனி ஆகாயத்தைச் சோதிக்க. ஆகாயமானது வட்ட வடிவாய்ப் புகை நிறம் படிக நிறமாய்க் குணம் பூரணமாய் ''ஹ'' என்னும் அக்ஷர மாய்ச் சாந்தியாதீத கலையாய் ஈசான மந்திரமாய் அதிதேவதை சதா சிவமாய் ஆயுதம் அமுத விந்துவாய் இப்படி எட்டு அடையாளத்தையும் ஓர் குணத்தை உடையதாயிருக்கிற ஆகாயத்தைத் தியானித்து வாயுவைப் பூரக கும்பகம் செய்து மேனோக்கி 'ஓம் ஆம் சாந்தியாதீத கலாயவும் பட்' என்றொருதரமுச்சரித்துச் சத்தமாகிய வோர் குணத்தையும் போக்கி ஆகாயத்தைச் சத்தியினாலே மறைக்கப்பட்டதாகப் பார்க்க.

தேகம் காற்றிலுலர்ந்ததாக்ப் பாவித்து ஆகாயத்தை நித்திய தத்துவ வியாபக தத்துவ சுத்த தத்துவமான பரமாகா சத்தினிடமாகக் கூட்டி அத்திர மந்திரத்தினாலே வலக்கால் பெருவிரலில் காலாக்கினியை எழுப்பிச் சரீரமெல்லாம் வெந்து தகனப்பட்டதாகப் பாவித்துப் பொருத் தப்பட்ட பந்தமெல்லாம் நீங்கி சர்வ சூனியமாய்ச் சுத்த வெளியானதாகப் பாவித்துப் பின்பு அகாரத்திலே ஆங்காரமும் உகாரத்திலே புத்தியும் மகாரத்திலே மனமும் விந்துவிலே சித்தமும் இலயத்தானத்திலே நின்று சூக்ஷும சரீரமுண்டாயினவாகவும் விந்துவில் சிவமும் சிவத்தில் சத்தியும் சத்தியில் சதாசிவமும் சதாசிவத்தில் மகேஸ்வரனும் மகேஸ்வரனிடத்தில் சுத்த வித்தையும் மாயையில் வித்தியா தத்துவமும் வித்தியையில் பிர கிருதி தத்துவமும் பிரகிருதியில் குண தத்துவமும் குணத்திற் சாத்துவிக வாங்காரமும் ஞானேந்திரியமும் இராசத வாங்காரத்திற் கண்மேந்திரி யமும் தாமத வாங்காரத்தில் தன்மாத்திரையும் தன்மாத்திரை ஐந்தில் பூதம் ஐந்தும் உண்டாயினவாகவும் சிந்தித்துத் துவாத சாந்தத்திலேயிருக்கிற சிவசத்தியினுடைய அமிர்த தாரையினாலே சுழுமுனா நாடிக்குள்ளும் புறம்பும் நனைந்ததாக 'ஓம் சத்தியோ வெளஷடு' வென்று உச்சரித்துச் சிந் தித்துத் துவாத சாந்தத்திலே பதியினிடமாக இருக்கின்ற ஆத்மாவை ஐங் கலைப் பிரணவத்துடனேயிருக்கின்ற ஆத்ம மந்திரத்தை 'ஓம் ஆத்மனே நம' வென்றுச் சரித்து வாயுவைப் பூரக கும்பகம் செய்து கொண்டே யெடுத்து இருதைய கமலமாகிய சுத்த மாயா பீடத்திலே வைத்து அருளா யிருக்கிற வமிர்தத்தினாலேயபிஷேகம் பண்ணியங்க நியாசமும் செய்க.

பிருதிவி அப்புவுக்கும், அப்பு தேயுவுக்கும், தேயு வாயுவுக்கும், வாயு ஆகாயத்துக்கும், ஆகாரமானவையாய்ப் பார்க்க என்ற முறை ஏட்டுப் பிரதியிற் பிறழ்ந்து கிடக்கின்றனவாகையாலேற்றபடி கொள்க. பிரதியிலிருந்தபடியே யீண்டெழுதப்பட்டிருக்கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

இனி ஆத்மாவினுடைய இருதைய கமலத்திலே சிவனை வைத்தர்ச்சிக்கும் அந்தரியாக பூசையாவது இருதைய கமலத்திலே ஆத்மாவைத் தானாகப் பாவித்திருந்து கொண்டு மானதத்தினாலே ஸ்நானம் அநுட்டானம் செபம் செய்து, இருதையத்தைப் பூசாமண்டப மாக்கிப் பத்திரம் வைத்துக் கோடிட்டு இடம் பண்ணித் திருமஞ்சனம் திருப்பள்ளித் தாமம் சந்தனம் அபிஷேகத் திரவியங்கள் திருவாபரணம் பட்டுப் பரிவட்டம் நைவேத்தியம் மணிதூபதீபம் சங்க வாத்தியங்களும் மற்ற பூசைத் திரவியங்களும் மனத்தினாலே பாவித்து வருவித்தமைத்து வைத்துக் கொண்டு சூரிய பூசை முதலாகச் செய்து கருமை செம்மை வெண்மையாயிருக்கிற மூன்று குணத்தையுடைய நாபித்தானத்திலே கந்தமும் பீசமும் அங்குரமும் அதன்மேல் எட்டங்குலத்துடனே நாளமும் கண்டமும் எட்டு இதழுடைய வெண்டாமரையிலே இருக்கிற சோதிலிங் கந்தன்னில் துவாத சாந்தத்தினின்றும் சிவனைப் பூரக கும்பத்துடனே மூலத்தினால் ஆவாகனம் செய்க.

அமலனைத் திருமஞ்சனத்தினாலும் திருப்பள்ளித் தாமத்தி னாலும் மற்றும் உண்டாகிய உபசாரங்களினாலும் புறம்பே அர்ச்சிக்கு மாறு போல அர்ச்சித்துப் பின்பு சுத்தமாயை முதலாக அசுத்தமாயை ஈறாக வோமகுண்டமாக்கி மெய்ஞ்ஞானாக்கினியினாலே புருவ மத்தியிலே யிருக்கிற அமிர்த தாரையினாலே ஓமம் வளர்த்தலாகிய இந்த அக்கினி காரியத்தையும் மானதமாகச் செய்து பூசையிலுள்ள பலன்களெல்லாம் பரமனுக்களித்துப் புருவ நடுவில் நின்மல மூர்த்தியாகக் கருதித் தியானம் பண்ணித் தேவி பூசை முதலியனவும் செய்த சண்டேஸ்வர பூசையையும் விதிப்படி செய்து பின் சுவாமிக்கு அர்க்கியம் கொடுத்துவிட்டுச் ''சுவாமி! அடியேன் தெரிந்த அளவு உட்பூசை செய்து முடித்தேன். இனிப் புறப் பூசை செய்யப் போகிறேன். அப்புறப் பூசையில் பத்தியீனம் மந்திரவீனம் கிரியாவீனம் முதலிய எவ்வித ஈனங்கள் வந்தாலும் அவற்றைத் தேவரீர் இன்பமாக நினைந்து அடியேன் மேற் கருணை வைத்து மார்க்கண்டேயர்க் கெப்படி யருளியதோ அப்படியே புறப் பூசையையும் கொண்டருளியடி யேற்குக் கிருபை செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு அனுமதி பெற்றுச் சுவாமியை யிருதைய கமல சம்புடத்தில் எழுந்தருளப் பண்ணித் தோத்திரம் செய்து தியானம் பண்ணிக் கொண்டு கால்கை சுத்தி பண்ணி அகோரம் பத்துருச் செபித்துக் கொண்டு பின்பு தான சுத்தி செய்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IK

பூசாத் தானத்தில் மூல மந்திரத்தை உச்சரித்து நிரீக்ஷணம் பண்ணி அத்திரத்தினாலே தாளத்திரையந்திக்கு பந்தனமும் கவசத்தால் அவ குண்டனமும் பண்ணித் திக்கு பந்தனம் அக்கினி மதிலாகவும் அவகுண்டனம் மூன்றகழாகவும் சத்தியெங்கும் நிறைந்திருக்கிறதாகவும் பாவித்துத் தேனுமுத்திரை மகாமுத்திரையும் ''ஓம் ஆம் சத்தியே நம'' வென்று மேலும் கீழுமாகக் கொடுத்துத் திரவிய சுத்தி பண்ணுமுன்பாகப் பாத்தி யாசமனவர்க்கியம் தாபிக்க.

சுவர்ணம் முதலாகிய வட்டகைப் பாத்திரங்களை அத்திரத்தால் விளக்கிச் சுத்த சலத்தை விந்துத் தானத்தின் அமிர்த சலதாரையாகப் பாவித்து வட்டகை மூன்றில் பாத்தியத்துக்கு ''இருதையாய வெளஷட்'' என்றும், ஆசமனத்துக்கு 'இருதையாய வெளஷட்' என்றும், விசேஷார்க்கியத்துக்குச் 'சிவாய வெளஷட்' என்றும் சலம் பூரித்து அந்தந்த மந்திரங்களாலேயே அவ்வவற்றில் கந்தபுஷ்பம் அறுகு அட்சதை போட்டுப் பாத்தியத்துக்கு இருதைய முதலான ஆறு மந்திரங்களினாலும் ஆசமனத்துக்குச் சங்கிதை பதினொன்றாலும் விசேஷத்துக்குச் சிவாசனம் சிவ மூர்த்தி மூலம் பஞ்சப் பிரமம் வித்தியா தேகம் இருதையாதியாறங்க மெனப்படும் சடங்கமாகிய பதினைந்து மந்திரங்களினாலும் அர்ச்சித்து அந்தந்த மந்திரங்களாலேயே அவ்வவற்றில் அபிமந்திரித்தலும் செய்க.

நிரீக்ஷணாதி நாற் சுத்தி தாளத்திரையம் திக்குபந்தனம் அவ குண்டனம் தேனு முத்திரையாகிய அட்டசங்காரம் பண்ணி மகா முத்திரையும் எல்லாவற்றினும் தனித்தனி முறையே கொடுத்து விசேஷார்க்கியத்தில் ஒருபுஷ்பம் தோய்த்து அதனாலே தன் சிரசிலே மூன்று தரம் 'அத்திராய நம' வெனத் தன்னையும், அம் மந்திரத்தினாலேயே பூசாத் திரவியங்களையும் புரோட்சித்துத் திருமேற்பூச்சை சத்தியோசாதத்தினாலும் திருப்பரிவட்டத்தை வாமத்தினாலும் திருவாபரணத்தை யகோரத்தினாலும் திருமாலையை ஈசானத்தினாலும் திருவமுதைத் தற்புருஷத்தினாலும் பாலை இருதையத்தினாலும் தயிரைச் சிரசினாலும் நறுநெய்யைச் சிகையினாலும் தேனை கவசத்தினாலும் சந்தனக் குழம்பை யத்திரத்தினாலும் மற்றுமுண்டான திரவியங்களைக் காயத்திரியினாலும் அபிமந்திரித்துக் கவசத்தினாலே அவகுண்டனம் பண்ணியிருதையத்தினாலே அல்லது மூலத்தினாலே தேனு முத்திரை கொடுத்து அந்தந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

மந்திரங்களினாலே மகா முத்திரையும் கொடுத்துப் பின் விசேஷார்க் கியத்தில் ஒரு புஷ்பம் தோய்த்துத் திருமஞ்சனக் குடத்திலே ''ஓம் அத்திராயவும் பட்'' என்று போட்டுத் திக்கு பந்தனம் அவகுண்டனம் தேனு முத்திரை மகா முத்திரை கொடுத்து இவ்விதம் திரவிய சுத்தி முடித்தபின் மந்திர சுத்தி செய்க.

தன்னாசனத்தில் ''சிவாய நம'' வென்றும் மார்பிற் ''சிவ மூர்த் தியே நம'' வென்றும் புஷ்பத்தாலர்ச்சித்து நெற்றியிலும் 'இருதையாய நம' வென்று சந்தனத் திலகமிட்டு சிரசில்'ஓம் சிவாய நம' வென மூலத்தை உச்சரித்துப் புஷ்பத்தாலர்ச்சித்து நமோந்தமான மூலத்தை துவாத சாந்த மனவாகவும் நமோந்தமான பஞ்சப் பிரம சடங்கங்களை விந்துத்தான மளவாகவும் உச்சரித்து அபிமந்திரித்து அந்த மந்திரத்தினாலே தன்னைச் சிவமாகப் பாவித்துத் தியானம் செய்துகொண்டு சடுத்தாசனம் கற்பிக்க. சுவாமியெழுந்தருள நடுவே 'அனந்தாசனாய நம' வென்றும் அதற்கு அக்கினி கோணத்திலே அதாவது தென்கிழக்கே 'தன்மாசனாய நம' வென்றும், நிருதியிலே அதாவது தென்மேற்கே 'ஞானாசனாய நம' வென்றும் வாயுகோணத்திலே அதாவது வடமேற்கே 'வைராக்கியாச னாய நம' வென்றும் ஈசான திசையிலே அதாவது வடகிழக்கே 'ஐஸ்வரி யாசனாய நம' வென்றும் நடுவே 'பத்மாசனாய நம' வென்றும் அர்ச்சித் தலே சடுத்தாசனம், கற்பித்தலாம். இனி இலிங்க சுத்தி செய்க.

'அத்திராய நம' வென மிர்த்திகை யெடுத்து 'அத்திராய நம' வென நீர் கொடுத்து 'இருதையாய நம' வெனப் பத்திரம் கிள்ளி வைத்து நனைந்தொருமித்தபின் அதையெடுத்து 'அராய நம' வெனப் பழுதா ராய்ந்து பார்த்துப் பின்பு நன்றாகப் பிசைந்து 'வித்தியா தேகாய நம' வென்றாவது 'பினாகியே நம' வென்றாவது சுவாமி பாணித்துச் 'சூல பாணியே நம' வென்றொரு பீடத்தில் சுவாமியை எழுந்தருளப் பண்ணி 'சம்புவே நம' வென்றொரு புஷ்பம் சாத்தி 'மகாதேவாய நம' வென்று அப்பீடத்தோடே நடுப் பத்மாசனத்திருத்தி மூலத்தால் புஷ்பம் சாத்திச் சாமானியார்க்கியத்தினாலே சத்தியோசாத முதல் ஈசானம் ஈறாக ஐந்து திருமுடிகளிலும் சுவாகாந்த மூலத்தினாலே அதாவது 'ஓம் சிவாய சுவாகா' வெனக் கொடுத்துக் கூடியதை நிவேதித்துத் தூபம் தீபம் பணிமாறிப் பின் ஆசமன அர்க்கியம் கொடுத்துக் கூடியதை நிவேதித்துத் தூபம் தீபம் பணிமாறிப் பின் ஆசமன அர்க்கியம் கொடுத்துச் சத்தியோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-

சாதம் முதல் ஈசானம் ஈறாக ஐந்து திருமுடிகளினும் கனிட்டை முதல் அங்குட்டமீறாக அந்தந்த மந்திரங்களினாலே நிசித்து கனிட்டை யனாமிகை நடுவேயொரு புஷ்பத்தை வைத்துக் கொண்டு சிவலிங் கத்தின் மேலே கையை வைத்துப் பஞ்சப் பிரம சடங்கத்தால் அபிமந்தி ரித்து அங்குட்டம் தற்சனி விரல்களினாலே 'அத்திராய நம' வென்று புஷ்பங்களைக் கழித்து உடனே கனிட்டையனாமிகை நடுவே வைத்தி ருக்கிற புஷ்பத்தை 'ஓம் சிவாய நம' வென்று சாத்திக் கழித்த நின்மாலி யத்தை ஈசான திக்கிலே சண்டேஸ்வர பூசா நிமித்தமாக ஒரு பத்திரம் போட்டு,அதன் மேல் 'இருதையாய நம' வென்று வைத்து 'அத்திராய நம' வென்று சிவலிங்கப் பெருமானைச் சுத்தோதக சலத்தால் மூன்று தரம் அபிஷேகம் பண்ணிக் 'கவசாய நம' வென்று குச்சுப்புல் சாத்தியதாக பாவகம் செய்து 'அத்திராய நம' வென்று சுத்தோகசலம் மீட்டுமொரு கலசமபிஷேகம் பண்ணிப் பின்பு சாமானியவர்க்கியம் 'அத்திராய நம' வென்றபிஷேகித்து 'ஓம் சிவாசனாய நம' 'ஓம் சிவமூர்த்தனே நம' 'ஓம் சிவாய ஒம' வென்று அஷ்ட புஷ்பம் சாத்திச் சாமானிய வர்க்கியம் 'சிவாய சுவாகா' வென்று மூன்று தரம் கொடுத்துத் தூப தீபம் பணி மாறுக. இதுவே இலிங்க சுத்தியாம். இனிச் சில ஏட்டுப் பிரதியிலுள்ள இலிங்க சுத்தி வருமாறு:–

'தானே வேதிகையிலே சடுத்தாசனம் கற்பித்துச் சிவலிங்கப் பெருமானை யெழுந்தருளப் பண்ணி முன்னாட் ✱பரியூஷித பூசையில் காயத்திரியினாலே யொரு புஷ்பம் சாத்திச் சாமானிய வர்க்கியத்தினாலே சத்தியோசாத முதலாக ஈசான மீறாக ஐந்து திருமுடிகளினும் சகலாகந்த மூலத்தினாலே யர்க்கியம் கொடுத்துத் தூப தீபம் பணிமாறிச் சத்தியோ சாதம் முதலாகப் பஞ்சப் பிரமங்களினாலே கனிட்டை முதலாக அங்குட்ட மீறாக நிசித்துப் பூசையின் மேலே கையை வைத்துப் பதினொரு மந்திரத் தினாலே அபிமந்திரித்து அத்திரத்தால் கழித்து இருதையத்தால் சண்டேஸ்வர பூசைக்கு வைத்து அத்திரத்தினாலே ஆவுடையாளையும் இருதையத்தினாலே சிவலிங்கப் பெருமானையும் முக்கால் ஆடியருளப் பண்ணிக் கவசத்தால் குச்சுப்புல் சாத்திச் சாமானிய வர்க்கியத்தை யத்திரத்

✱முன்னாள் – முதலாள்; பரியூஷிதம் – பழமை; முதனாட் செய்யப் பட்டுப் பழமையாயிருக்கிற பூசை என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

தினாலே யாடியருளப் பண்ணிச் சிவனுக்கு ஆசனமூர்த்தி மூலத்தால் அஷ்ட புஷ்பம் சாத்தி யர்க்கியம் கொடுக்க' என்பது இலிங்க சுத்தியாம். பின் வடக்குத் துவாரத்திலே சத்த குருபூசை செய்க.

சுவாமியின் பீடத்துக்கு வடமேற்கான வாயு மூலையிலே 'ஓம் மகா கணபதியாசனாய நம', 'ஓம் மகா கணபதி மூர்த்தனே நம' 'ஓம் மகா கணபதியே நம' வென்றும் அம் மகா கணபதிக்குக் கிழக்கே 'ஓம் மகா லட்சுமியாசனாய நம', ஓம் மகாலட்சுமி மூர்த்தயே நம', 'ஓம் மகா லட்சுமியே நம' வென்றும் இவ்விருவர்களையும் பீடத்துக்கு வடகிழக் கான ஈசான மூலையிலே 'ஓம் சதாசிவ குருவாசனாய நம' 'ஓம் சதாசிவ குருமூர்த்தனே நம' 'ஓம் சதாசிவ குருவே நம' வென்றும் இக்குருவிற்கு மேற்கே 'ஓம் அநந்த குருவாசனாய நம' 'ஓம் அநந்த குருமூர்த்தனே நம' 'ஓம் அநந்த குருவேநம' வென்றும் இக்குருவிற்கு மேற்கே 'ஓம் ஸ்ரீகண்ட குருவாசனாய நம' 'ஓம் ஸ்ரீகண்ட குருமூர்த்தனே நம' 'ஓம் ஸ்ரீகண்ட குருவே நம' வென்றும் இக்குருவிற்கு மேற்கே 'ஓம் அம்பிகை குரு வாசனாய நம', 'ஓம் அம்பிகை குருமூர்த்தாயை நம', 'ஓம் அம்பிகை குருவே நம' வென்றும் இக்குருவிற்கு மேற்கே 'ஓம் கந்தகுருவாசனாய நம', 'ஓம் கந்தகுருமூர்த்தனே நம', 'ஓம் கந்த குருவே நம' வென்றும், இக்குருவிற்கு மேற்கே 'ஓம் விஷ்ணு குருவாசனாய நம' 'ஓம் விஷ்ணு குருமூர்த்தனே நம', 'ஓம் விஷ்ணு குருவே நம' வென்றும், இக்குருவிற்கு மேற்கே 'ஓம் பிரமகுருவாசனாய நம', 'ஓம் பிரமகுருமூர்த்தனே நம', 'ஓம் பிரமகுருவே நம' வென்றும் சத்த குருக்களாகிய இவ்வெழுவர்களையும் அவரவர் ஆசனமூர்த்தி மூலத்தால் இவ்விதமர்ச்சித்து அர்க்கியம் கொடுத்து மீட்டும் அர்ச்சித்து பாவனாபிஷேகம் செய்து கந்தபுஷ்பம் அறுகு அட்சதை சாத்தி அர்க்கியம் புரோட்சித்து அவரவர் மூலத்தால் பூசை செய்து ''அடியேன் செய்யும் சிவபூசைக்கு யாதோர் விக்கினமும் வராமல் இரட்சிக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு அவர்கள் அனுமதியைப் பெற்றுப் பின்பு சத்தியாதி சத்தி பரியந்தமாகப் பிரணவ மூலம் ஆதார சத்தியர்ச்சனை செய்க.

தேவனுடைய லிங்க பீடத்தின் அடியிலே 'ஓம் ஹாம் யோக பீடாய நம' பிரம சிலைக்கு கீழே 'ஓம் ஹாம் ஆதார சத்தியே நம' பிரம சிலைக்கு மேலே 'ஓம் ஹாம் அநந்தாய நம' அதன்மேல் சிர[illegible]னம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-I

அக்கினி கோணம் முதலாக ஈசானம் ஈறாக ஓம் தந்மாய நம, ஓம் ஞானாய நம, ஓம் வைராக்கியாய நம, ஓம் ஐஸ்வர்யாய நம' வெனத் தந்ம ஞான வைராக்கியம் ஐஸ்வர்யங் கால்களாகவும் அதன் மேற்கிழக்கு முதலாக வடக்கீறாக 'ஓம் அதந்மாய நம, ஓம் அஞ்ஞானாய நம, ஓம் அவ்வைராக்கியாய நம, ஓம் அநைஸ்வரியாய நம, வென அதன்மம் அஞ்ஞானம் அவ்வைராக்கியம் அநைஸ்வரியம் சட்டங்களாகவும் அதன் மேல் நிருதி கோணத்தில் அசுத்த மாயையைச் சிவந்த நிறமாய்க் கருதி 'ஓம் ஹாம் அதச்சதனாய நம' என்று ஈசான மூலையிலே சுத்த மாயையை வெள்ளை நிறமாய்க் கருதி ''ஓம் ஹாம் ஊர்த்துவச் சதனாய நம'' வென்று மேற்பலகையாகவும் ஆதார சத்தியின் மேலே ''ஓம் கந்தாய நம, ஓம் பீசாய நம, ஓம் அங்குராய நம, ஓம் நாளாய நம, ஓம் கண்ட கேப்பியோ நம, ஓம் தனேப்பியோ நம, ஓம் கேசரேப்பியோ நம, ஓம் கர்ணிகாய நம, ஓம் பீசேப்பியோ நம, ஓம் சூக்குமாய நம, ஓம் சிவோத் துமாய நம, ஓம் ஏகருத்திராய் நம, ஓம் திரிமூர்த்தனே நம, ஓம் ஸ்ரீகண்டிலே நம, ஓம் சிகண்டாய நம, ஓம் வாமாய நம, ஓம் சேட்டாய நம, ஓம் ரௌத்திரியே நம, ஓம் காளியே நம, ஓம் கலவிகர்னியே நம, ஓம் பெலவிகர்னியே நம, ஓம் பெலப்பிரமதன்னியே நம, ஓம் சர்வ பூத மன்னியே நம, ஓம் மனோன்மணியே நம'' வென்று அட்ட வித்தியேசுரர் தாமரையிதழாகவும் இந்திர திசை முதலாக ஈசான திசையிறாக எட்டித ழினும் அநந்தன் முதலாக ஸ்ரீகண்டியீறாகப் பூசித்து அறுபத்து நாலு கலைகளும் கேசரமாகவும் இச்சா ஞானக் கிரியை கன்னிகையாகவும் ஐம்பத்தோரக்ஷரங்களும் பீஜமாகவும் பூசித்துக் கொள்க.

இவையெல்லாம் உடையதாயிருக்கிற பத்மத்தை 'ஓம் ஹாம் பத்மாசனாய நம' என்று பூசித்துக் கிழக்கு முதலாக எட்டுத் திக்கிலும் எட்டிதழிலும் அட்ட வித்தியேசுரரை அதிட்டுத்துக் கொண்டிருக்கிற வாமாயி முதலான எட்டுச் சத்திகளையும் பூசித்துக் கன்னிகை ஈசானத் திலும் மனோன்மணியைப் பூசித்து இதழ் நுனி வட்டத்திலே ''ஓம் சூரிய மண்டலாய நம, ஓம் சூரிய மண்டலாதிபதே பிர்மனே நம', என்றும் கேசர நுனி வட்டத்திலே''ஓம் சோம மண்டலாய நம, ஓம் சோம மண்டலாதிபதே விஷ்ணுவே நம'' என்றும் கன்னிகை நுனி வட்டத்திலே ''ஓம் அக்கினி மண்டலாய நம, ஓம் அக்கினி மண்டலாதிபதே ருத்திராய நம'' என்றும் கன்னிகை நடுவே ''ஓம் சத்தி மண்டலாய நம, ஓம் சத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

மண்டலாதிபதே மகேஸ்வராய நம'' என்றிந்தப்படி அந்தந்தத் தானங்
களிலர்ச்சித்து ஆசன மூர்த்தி மூலத்தால் பூசிக்க.

அதன் மேலே சிவாசனத்தைச் சுத்த மாயையாகவும் அது வியா
பகமாயிருக்கிறதாகவும் தியானித்து 'ஓம் ஹ்ராம் சிவாசனாய நம' வென்று
சாத்திச் சிவமூர்த்தியைத் தேசோ ரூபமாய்த் தெண்ட வடிவாய்த் தத்துவ
ரூபமாய் பரவிந்து வரைக்கும் வியாபகமாயிருக்கின்றதாகத் தியானித்து
புருவ மத்தியினின்றும் புஷ்பாஞ்சலியால் கையைக் கொண்டு போய்
கையை விரித்து மூடி 'ஓம் ஹ்ராம் சிவமூர்த்தியே நம' வென்று லிங்
மூர்த்தியிலே சார்த்தித் திருமுடி முதலாகச் சீர்பாதம் ஈறாக ஈசானாதியான
பஞ்சப் பிரமத்தை உச்சரித்து அங்குட்ட முதல் கனிட்டை ஈறாக அந்தந்த
தானங்களிலே நிசிப்பது தெண்ட பங்கியாகும். ஈசானம் முதலாக
சத்தியோ சாதம் ஈறாக ஐந்துதிருமுடிகளிலும் நிசிப்பது முண்டபங்கியாம்.

இனி வித்தியாதேகம் பூசிக்கும்படி; தேசோரூபமாய்த் தெண்ட
காரமாய் ஞான வடிவினராய்ச் சதாசிவமூர்த்தியைத் தியானித்து 'ஆம்
என்னும் பிரசாத மந்திரத்தை உச்சரித்து கை நிரம்பப் புஷ்பமெடுத்து
உச்சியில் கொண்டுபோய் இறக்கி அவ்வுச்சியினின்றும் புருவ மத்தியில்
கொண்டு வந்து கையை விரித்துச் சதாசிவமூர்த்தி மின்னிறமாய்
புஷ்பாஞ்சலிக்குள்ளே வந்ததாகப் பாவித்து மூடி 'ஓம் ஹ்ராம் ஹ்ரௌம்
வித்தியாதேகாய நம' வென்று லிங்கத்தினுடைய திருமேனியிலே சாத்தி
'ஓம் ஹ்ரௌம் நேத்திரேப்பியோ நம' வென்று பஞ்ச முகங்களிலும்
நேத்திரம் கொடுத்து நேத்திரம் பாவித்துப் பின்பு ஆவாகனம் செய்க.

சடங்கத்தை உச்சரித்துக் கைகளில் புஷ்பம் நிறைத்து அஞ்சலி
செய்து கொண்டு மேதாதி கலையோடு கூடியாதித்த பிரபை போன்ற மூ
மந்திரத்தை 'ஓம் நமசிவாய நம' என்று பூரகத்தினாலே பிரமாத்
காரணேஸ்வரனார் முறையே கடந்து மனதினாலே துவாத சாந்தம்
